கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2009/2010 (MARCH 2015)

PSS- **4104** – நிர்வாகச் சட்டங்கள்

**(Administrative Laws)**

11 MAY 2015

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

பகுதி-I

01. அ) சட்டத்தின் தோற்றுவாய்கள் (Sources) எவை?, இதில் முற்தீர்ப்பின் (Precedent) சட்டப் பெறுமானம் யாது? (10புள்ளிகள்)

ஆ) இலங்கையின் சட்டமுறைமையின் பொதுத்தன்மை (Nature of the Legal System) யாது? (05புள்ளிகள்)

இ) தேசவழமைச்சட்டத்தின் பிரயோகத்தின் ஆய்விடயம் (Facts in issue) எவை? (05புள்ளிகள்)

ஈ) ரோமன் டச்சு சட்டத்தை இலங்கையில் பொதுச்சட்டமாக கொள்ளத்தக்க ஆதாரங்கள் (Common Law Concept) எவை? (05புள்ளிகள்)

02. அ) நிர்வாக அதிகாரப் (Administrative Power) பிரயோகத்தை நெறிப்படுத்துவதே நிர்வாகச் சட்டத்தின் நோக்கமாகும். இக்கூற்றை விளக்குக. (05புள்ளிகள்)

ஆ) "நிர்வாக நீதிமன்றங்கள் (Administrative Courts) பயம் உள்ள ஏற்பாடாகும்." குறிப்புரை செய்க. (05புள்ளிகள்)

இ) நிர்வாக அதிகாரியின் தற்துணிவு அதிகாரப்பிரயோகம் (Discretionary Power) என்பதற்கு கருத்து விளக்கம் தருக. (05புள்ளிகள்)

ஈ) நீதி அதிகாரம் (Judicial Power), மருவிய நீதியதிகாரம் (Quase Judicial) இவற்றுக்கு விளக்கவுரை தருக. (10புள்ளிகள்)

03. அ) கையளிக்கப்பட்ட சட்டவாக்கத்தின் (Subordinate Law) அவதானிக்கத்தக்க குறைபாடுகள் யாவை? (10புள்ளிகள்)

ஆ) இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பினை சுருக்கமாக கூறுக. (05புள்ளிகள்)

இ) உச்ச நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினை (Jurisdiction of the Suprime court) எடுத்துக் காட்டுக. (10புள்ளிகள்)

04. அ) பகிரங்க கூட்டுத்தாபனத்திற்கு வரைவிலக்கணம் தருக. (05புள்ளிகள்)

ஆ) பகிரங்க கூட்டுத்தாபனங்களின் வகுப்பாக்கம் யாது? (05புள்ளிகள்)

இ) பகிரங்க கூட்டுத்தாபனங்களை மத்திய அரசு கட்டுப்படுத்துகின்றதா? குறிப்புரை செய்க. (15புள்ளிகள்)

## பகுதி –II

05. "நிறைவேற்றுனர்கள் நிர்வாகிகளின் சட்ட எல்லை மீறிய செயல்களை தடுத்து நிறுத்த நீதிமன்றங்களினால் பிரயோகிக்கப்படும் கோட்பாடே வலுவிகந்தது (Ultra Vires) என்ற கோட்பாடாகும்." இக்கூற்றை விமர்சனம் செய்க. (25புள்ளிகள்)

06. "நிர்வாக அதிகாரியின் சட்டத்திற்கு அப்பாற்பட்ட செயல்களினால் பாதிக்கப்படும் நபர் நீதிமன்றில் கோரப்படும் குறை தீர்ப்பாக அமைவது பேராணைகளாகும் (Prerogative writs) இக்கூற்றை பகுப்பாய்வு செய்க. (25புள்ளிகள்)